திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு தா.சவுண்டையா, இ.ஆ.ப.,

ந.க.தா4/1876/2009 நாள் : 04.12.2009.

பொருள்:- பணியமைப்பு – ஊரக வளர்ச்சி அலகு – திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு) தற்காலிக தட்டச்சர் பணி நியமனம் - திருமதி.கே.கௌரி, - தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:-
1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செமு.எண் நக.தா4/13164/1990 நாள் : 08.11.1990.
2. தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்புரை நாள் 11.07.2002 (வழக்கு எண் 425/1997).
3. சென்னை உயர்நீதி மன்றம் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்புரை நாள் 10.06.2008 (வழக்கு எண் W.P.6333/2004).
4. அரசாணை எண் 124, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 12.09.2009 (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் நக.74240/08/D2 நாள் 26.09.2009 கடிதத்துடன் வரப்பெற்றது).
5. அரசு கடிதம் எண் 119 நாள் 23.10.2009 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை.

## உத்தரவு:-

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரக வளர்ச்சிப் பிரிவு அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திருமதி.கே.கௌரி என்பவர், திருச்சிராப்பள்ளி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 1-இல் காணும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி, 12.11.1990 முதல் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 10(a)(I)-இன் கீழ் தற்காலிக தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அரசாணை எண் 433, நாள் 14.12.1993-இன்படி 24.06.1995 அன்று 1995 ஆம் ஆண்டு தற்காலிக தட்டச்சர்களுக்கான சிறப்பு தகுதித் தேர்வில் இவர் தேர்ச்சி பெற தவறியதால், தனது பணியினை தொடர்ந்திட பார்வை 2-இல் காணுமாறு, தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். (வழக்கு எண் 425/1997). இவ்வழக்கின் தீர்ப்புரையில் இவருக்கு 12.11.1990 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி மனுவின் மீதான தீர்ப்பினை எதிர்த்து பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை மூலம் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு மேற்படி உத்தரவிற்கு தடையாணை பெறப்பட்டது.

இத்தடையாணையை எதிர்த்து தற்காலிக தட்டச்சர் திருமதி.கே.கௌரி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்ததைத் தொடர்ந்து (வழக்கு எண் W.P.6333/2004). பார்வை 3-இல் காணும் கடிதத்தின்வழி தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்பினை செயல்படுத்திடும்படி சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 4-இல் காணும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் அரசாணையில், தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகியோருக்கு 1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சிறப்பு தகுதி தேர்வில் தோல்வி அடைந்தவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரையின்படி அவர்கள் பணியேற்ற நாள் முதல் பணியினை வரன்முறை செய்தும், அவர்களுக்கு பணிப்பயன்கள மட்டும் (Service Benefits only) வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து திருமதி.கே.கௌரி, தட்டச்சர் என்பவரது பணியினை வரன்முறை செய்திட பார்வை 5-இல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பு மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அரசாணைக்குட்படுத்தி, திருமதி.கே.கௌரி என்பவர் முதன்முதலில் தற்காலிக தட்டச்சராக பணியேற்ற நாளான 12.11.1990 முற்பகல் முதல் பணிப் பயன்கள் (Service benefits only) மட்டும் பெற தகுதியுடையவர் என்ற நிபந்தனையுடன் தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- த.சவுண்டையா,
மாவட்ட ஆட்சித்தலைவர்.

/உத்தரவின்படி/

மாவட்ட ஆட்சியருக்காக,
திருச்சிராப்பள்ளி.

பெறுநர்:-

திருமதி.கே.கௌரி, தட்டச்சர்.
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப் பிரிவு),
திருச்சிராப்பள்ளி.

நகல்:- தா2 பணியமைப்பு பிரிவு.
நகல்:- தா4 இருப்புக் கோப்பிற்கு.
Gowri regularisation

குறிப்பாணை

ந.க.எண் /16275/07 நாள்: 12.07

இதன் சம்மந்தப்பட்டவரிடம் சார்பு செய்யப்படுகிறது.

பெறுநர்

திருமதி கே.கமலா,
தட்டச்சர்,
வட்ட அலுவலகம் (பாளை)
திருநெல்வேலி

மாவட்ட ஆட்சியருக்காக
மேற்பார்வை உதவியாளர்
(பொதுக்கிளை)
மாவட்ட ஆட்சியரகம்

13/12/07